ALPHA MIND POWER

# NEWSLETTER



FEBRUARY 2019

## *From Guruji's desk....*



My Dear Alpha Siddha,
I am writing this letter with my love and blessings.
I am sure your meditations are doing wonders for you. The best part of meditation is the inner peace that it gives you. When you touch base with this peaceful state of mind on a daily basis, slowly the inner transformation begins and you see yourself emerging as a more tolerant person with more clarity and contentment. Has this started with you? It is time to introspect on this.

Another very important aspect that meditation brings about within us is that it makes the voice of our conscience quite loud and clear. When that happens, it becomes very difficult to do anything out of the way. The voice of our conscience stops us.

A few days back I was in the car moving through our street which had been dug up for construction of the storm water drain. Because of the work, the street was in a mess. It was already a one way passage. When we were moving slowly taking care not to touch the dug up spot, an auto came from the opposite direction and started inching its way through the vehicles. Now, this made things worse and all the vehicles had to stop to let that auto pass.

Somebody stuck his head out of his car and shouted at the auto driver 'Why are you coming in this one way lane and causing so much difficulty to others?'. The immediate response from the auto driver was 'You have place to move, right? So, what is your problem? Keep moving.' That was the end of the conversation and everyone just started moving as they knew there was no way they could make the auto driver understand how much difficulty he was causing to others. Where was his conscience?

In another instance, I was in a queue at the airport to get my baggage scanned. One gentleman came and simply moved up the queue and placed his luggage first. Before anyone could say anything, he moved away. Again, when I was at the check in counter, I saw him walking past all those who were waiting and moving to a counter. Then later, when I was in a queue again to board the plane, I saw him slowly moving past everyone and reaching the airport staff. There he realised he was in the wrong queue and moved away! I was left wondering, where was his conscience?

It is very embarrassing to see human beings behaving so badly. What can change this? Supervision? Acute and immediate punishment? But then, where is the conscience?

I believe very strongly that when a person meditates, his conscience (inner voice) becomes strong and prompts him to do only what is right. This is the great transformation that happens within you.

We could blame politicians, the government, all the other people around us for things going wrong. But, I feel, if every individual started listening to his conscience and doing only what he honestly believed is right, society will certainly undergo a total transformation. And we can live a more dignified life.

How do we bring about that change? Let us start with ourselves. Meditate every day. Listen to your conscience. Do only what feels right to you. Create more positive energy around yourself. Treat people with dignity and courtesy. Generate more love in the family. This change will certainly fine tune you to receive abundance from the Universe.

Wishing you great meditations and inspiring experiences,

**Srimatha**

### ONLINE CLASS THROUGH MOBILE APP!

**ALPHA MIND POWER mobile App launched!**
Online level 1 class by Guruji is now available in the App in English and Tamil.

Download the app and register. You can purchase the online class or any other AMP meditations or products through this App.

### KAILASH YATRA WITH GURUJI!

We are happy to announce that our next Kailash Yatra is scheduled from 08.06.2019 to 15.06.2019

For further details, please call AMP office.
Ph: 9841272146, 9841402000

எனதருமை ஆல்ஃபா சித்தர்களே,
இக்கடிதத்தை எனது அன்பும் ஆசீர்வாதமும் கலந்து எழுதுகிறேன்.
உங்கள் தியானங்கள் உங்களுக்கு சிறந்த அனுபவங்களை தருகின்றன என நம்புகிறேன். தியானத்தின் சிறப்பே அது தரும் மன அமைதி தான். இந்த அமைதியை தினமும் உணரும்பொழுது உங்களிடம் ஒரு மாற்றத்தை காண்பீர்கள். உங்கள் பொறுமை அதிகரிக்கும், மனதில் தெளிவும் திருப்தியும் பிறக்கும். இந்த மாற்றம் உங்களுக்குள் துவங்கி விட்டதா? இதைப் பற்றி சிந்திக்க வேண்டிய தருணம் இது.
தியானத்தின் இன்னொரு மகிமை எதுவென்றால் நமது மனசாட்சியின் குரலை நன்கு கேட்க செய்வது தான். அப்படி கேட்கும்பொழுது தவறான எதையும் செய்வது கடினம். மனசாட்சியின் குரல் நம்மை தடுத்து நிறுத்தும்.
சில நாட்களுக்கு முன் மழைநீர் கால்வாய்க்காக தோண்டப்பட்ட நமது தெருவில் காரில் சென்று கொண்டிருந்தேன். அந்த வேலையினால் தெருவே மண்ணாக இருந்தது. அது ஒருவழி பாதை. மிக மெதுவாக பள்ளமான பகுதியை தவிர்த்து சென்று கொண்டிருந்தபொழுது எதிர்ப் புறமாக வந்த ஒரு ஆட்டோ வாகனங்களுக்கு நடுவில் ஊடுருவி செல்லத் துவங்கியது. அத்தனை வாகனங்களும் அப்படியே நின்று அந்த ஆட்டோ செல்ல வழி விட வேண்டியதாகி விட்டது.
ஒருவர் தனது காரிலிருந்து எட்டிப் பார்த்து அந்த ஆட்டோ ஓட்டுனரிடம் கேட்டார் ‘இந்த ஒருவழி பாதையில் வந்து ஏன் இப்படி எல்லோருக்கும் பிரச்சினை தருகிறீர்கள்?’ அவரிடமிருந்து உடனடியாக வந்த பதில் ‘உங்களுக்கு போக இடம் இருக்கிறதல்லவா? பிறகு என்ன பிரச்சினை? போய்க் கொண்டே இருங்கள்’. அத்துடன் எல்லோரும் பேசாமல் நகர துவங்கி விட்டார்கள். எத்தனை பேருக்கு அவரால் துன்பம் என்பதை அந்த ஆட்டோ ஓட்டுனருக்கு புரிய வைப்பது முடியாது என்பது அனைவருக்கும் புரிந்தது. ஆனால் அவரது மனசாட்சி எங்கே?
இன்னொரு சம்பவத்தில் ஏர்ப்போர்ட்டில் எனது லக்கேஜ் ஸ்கேன் செய்வதற்காக க்யூவில் நின்று கொண்டிருந்தேன். ஒருவர் வந்தவுடன் மெல்ல நகர்ந்து சென்று தனது பைகளை முதலில் வைத்து விட்டு யாரும் எதுவும் சொல்வதற்குள் மறுபுறமாக சென்று விட்டார். மீண்டும் செக் இன் கவுண்டர் அருகில் இருந்தபொழுதும் அதே மனிதர் எல்லோரையும் தாண்டி செல்வதைக் கண்டேன்.

அடுத்து விமானத்தில் ஏறுவதற்காக க்யூவில் நின்ற பொழுது அதே மனிதர் எல்லோரையும் தாண்டி மெல்ல செல்வதை கண்டேன். கடைசியில் தான் தவறான க்யூவில் நிற்பதை உணர்ந்து விலகி சென்றார். நான் மறுபடியும் யோசித்தேன்... அவரது மனசாட்சி எங்கே?
மனிதர்கள் இப்படி நடந்து கொள்வதை காணும் பொழுது மிகவும் வருத்தமாக இருக்கிறது. இதை மாற்றக் கூடியது எது? கண்காணிப்பா? அல்லது உடனடியான தண்டனையா? ஆனால், அவர்களது மனசாட்சி எங்கே?
எனது மிக வலிமையான கருத்து, தியானம் செய்யச் செய்ய மனசாட்சியின் குரல் வலுவடைகிறது. சரியான பாதையில் மட்டுமே அழைத்துச் செல்கிறது. அது தான் உங்களுக்குள் ஏற்படும் மகத்தான ஒரு மாற்றம்.
நாம் வேண்டுமானால் நம்மை சுற்றி இருப்பவர்கள், அரசியல்வாதிகள், அரசாங்கம், இவர்கள் தான் எல்லா தவறுகளுக்கும் காரணம் என்று பழி சொல்லலாம். ஆனால் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனும் தனது மனசாட்சியின் குரலை கேட்டு உண்மையாகவே சரி என்று அறிந்ததை மட்டுமே செய்தால் நிச்சயம் சமூகத்திலேயே மொத்தமாக ஒரு மாற்றம் ஏற்பட அது வழி வகுக்கும். நாமும் சுயமரியாதையுடன் வாழலாம்.
இந்த மாற்றத்தை எப்படி கொண்டு வருவது? நம்மிடமே துவங்குவோம். உங்கள் மனசாட்சியின் குரலைக் கேளுங்கள். உங்களுக்குச் சரி என்று தோன்றுவதை மட்டுமே செய்யுங்கள். உங்களை சுற்றி நல்ல சக்தியை உறுவாக்குங்கள். மனிதர்களை மதித்து மரியாதையுடன் நடந்து கொள்ளுங்கள். குடும்பத்தில் அன்பை அதிகமாக உருவாகச் செய்யுங்கள். இந்த மாற்றம் பிரபஞ்சத்தில் இருந்து பல வளங்களைப் பெற உங்களை தயார்படுத்தும்.

உங்கள் தியானங்கள் சிறக்கட்டும், அனுபவங்கள் பெருகட்டும்.

**ஸ்ரீமாதா**



## குருஜியுடன் கைலாஷ் யாத்திரை!

நமது அடுத்த கைலாஷ் யாத்திரை கீழ்கண்ட தேதிகளில் இருக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

08.06.2019 முதல் 15.06.2019 வரை

மேலும் விவரங்களுக்கு AMP அலுவலகத்தை தொடர்புகொள்ளவும்.

போன்: 9841272146, 9841402000

## மொபைல் ஆப் மூலம் ஆன்லைன் வகுப்பு!

**ஆல்ஃபா மைண்ட் பவர் மொபைல் ஆப் துவக்கம்!**
குருஜியின் முதல் நிலை வகுப்பு ஆன்லைனில் இந்த ஆப்பில் ஆங்கிலத்திலும் தமிழிலும் இப்பொழுது கிடைக்கும்.

ஆப்பை பதிவிறக்கம் செய்து பதிவு செய்துகொள்ளவும். ஆன்லைன் வகுப்பு மற்றும் AMP தியானங்களும் இதர பொருட்களும் இந்த ஆப் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

I had knee pain for the past few months. Since I have now crossed the age of 45 I took it for granted that this happens with age. I kept applying balm and tried to put up with it. Then I attended **Amrut Siddhi** class. Here our Guruji activated our DNA in the meditation and also explained that after this all problems associated with the ageing process will be reversed. Then I healed myself and now the knee pain has disappeared. I am able to walk and climb steps very freely. This is like a miracle to me! Thanks Guruji! **Latha,Chennai**




**AMP mobile app**

I learnt alpha level one in 2011 in Coimbatore. After that I had to travel to various places for my studies and job. I always wanted to attend level one again but could not do so because of my tight schedule. Today morning after I finished the first video from level 1 in the **Mobile App** I felt Guruji is by my side and felt her blessings. The same effect I had in 2011 came back. Thanks alpha team to come up with such innovation. I am still in alpha mind even though I did the meditation 4 hours back.

**Mr.Kannan**

**Anubandham** class today I attended in Goa was very comprehensive and more than to my expectation. I am sure that if one practice it as advised by Guruji any one can maintain good relationship which can help him Succeed in life ,also positively contribute for a improved family , social life and get rid of many unpleasant situation. I consider myself as a lucky and blessed person to have the experience of undergoing this wonderful training course. I am sure to Practice it my life. Thank you Guruji and the organising team from bottom of my heart.

**CKKrishnan**

I used to have fear over crackers right from my birth for which I used to cover my ears with my hands. My parents consulted a lot of psychiatrists and other physicians who weren't able to provide a viable solution for me to eliminate the fear. I started practising **Alpha mediation** since last May. Thanks to Guruji and Alpha's Negative Thoughts Removal, last Diwali was a game changer for me. I drove my car through a street filled with loud bursts of crackers and that 'fear' which was chasing me over two decades just vanished. I understood and felt the power of Alpha Meditation. I thank Guruji, Alpha and all Alpha Siddhas from the bottom of my heart.

**Poobesh Kumar**

My life changed completely after attending Alpha. But it was only after I attended **Srividya** class by Guruji that I am experiencing total bliss in meditation. Sri Vidya is such a big subject and Guruji has made it so easy for us. Sincerely, for a person like me, having two children, it is very difficult to find internal peace. But with Alpha and Sri Vidya, I am always in bliss. Thanks to Guruji, Bala and Alpha! **SANKARI**

எனக்கு கடந்த சில மாதங்களாகவே முட்டி வலி இருந்து வந்தது. வயது 45-ஐ கடந்து விட்டதால் இப்படித்தான் இருக்கும் என நினைத்தேன். தைலம் தேய்த்து சமாளித்தேன். பிறகு **அம்ருத சித்தி** வகுப்பில் கலந்து கொண்டேன். அதில் குருஜி நமது DNAயை ஊக்குவித்தார்கள். இதற்கு பிறகு வயது முதிர்வால் ஏற்படும் தளர்வுகள் மறைந்துவிடும் என்றும் சொன்னார்கள். நானும் தியானம் செய்தேன். முட்டி வலி மறைந்தே விட்டது. என்னால் நடக்கவும், படிகளில் ஏறவும் முடிகிறது. இது எனக்கு ஒரு அதிசயம் தான். நன்றி குருஜி

**லதா, சென்னை**

**AMP மொபைல் ஆப்**

நான் 2011ம் ஆண்டு கோவையில் ஆல்ஃபா முதல் நிலை வகுப்பில் கலந்து கொண்டேன். அதன் பிறகு எனது படிப்பு மற்றும் வேலைக்காக பல ஊர்களுக்கு செல்ல வேண்டி இருந்தது. மீண்டும் ஒரு முறை முதல் கட்டத்தில் கலந்து கொள்ள விரும்பினேன். ஆனால் முடியவில்லை. இன்று காலை **மொபைல் ஆப்பில்** முதல் கட்ட வகுப்பின் முதல் வீடியோவை பார்த்து முடித்தேன். குருஜி என்னருகில் இருப்பது போல உணர்ந்தேன். 2011 ஆண்டு அனுபவத்தின் உணர்வை மீண்டும் பெற்றேன். இந்த புதிய முயற்சிக்காக ஆல்ஃபா குழுவினருக்கு நன்றி. 4 மணி நேரம் முன்பே தியானம் செய்து முடித்தாலும் இன்னமும் ஆல்ஃபாவில் தான் இருக்கிறேன். **- கண்ணன்**

**அனுபந்தம்** வகுப்பில் கலந்து கொண்டேன். நான் எதிர்பார்த்ததை விட மிக அற்புதமாக இருந்தது. இந்த வகுப்பை தொடர்ந்து செய்து வந்தால் வாழ்வில் நமது உறவுகளை பலப்படுத்துவதைப் பற்றியும், சமூக நலன் மற்றும் எதிர்பாராத சிக்கல்களை எப்படி எதிர்கொள்வது என்பதைப் பற்றியும் குருஜி நமக்கு வழிவகுத்துள்ளார். இந்த அரிய வகுப்பில் கலந்து கொண்டதை எனக்கு கிடைத்த பாக்கியமாக கருதுகிறேன். என் வாழ்க்கையை சிறப்பாக அமைத்துக்கொள்ள இந்த தியானத்தை தொடர்ந்து செய்வேன் என்பது உறுதி. இந்த அரிய வகுப்பை நமக்களித்த குருஜிக்கு நன்றி! **CK கிருஷ்ணன்**

சிறு வயதிலிருந்தே பட்டாசு வெடிப்பது பயம். என்னுடைய இரு காதுகளையும் கெட்டியாக மூடிக்கொள்வேன். எனது பெற்றோரும் இந்த பயத்திலிருந்து விடுபட நிறைய மருத்துவர்களிடம் அழைத்துச் சென்றனர். ஆனால் எதிலும் சரியாகவில்லை. ஆல்ஃபா தியானம் முதல் கட்டம் கடந்த மே மாதத்திலிருந்து தொடர்ந்து பயிற்சி செய்துவந்தேன். மேலும் தீய எண்ணங்கள் களைதல் தியானமும் செய்துவந்தேன். கடந்த தீபாவளி எனக்கு ஒரு மிகப் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. தெருவில் பட்டாசு வெடிக்கும்பொழுது எந்த வித பயமுமின்றி என் காரில் சென்றேன். ஆல்ஃபா தியானத்தின் சக்தியை உணர்ந்தேன். குருஜிக்கும், ஆல்ஃபாவுக்கும் என் இதயபூர்வமான நன்றி

**பூபேஷ் குமார்**

ஆல்ஃபா வகுப்பிற்கு வந்த பிறகு என் வாழ்க்கையே மாறி விட்டது. ஆனால் குருஜியிடம் **ஸ்ரீவித்யா** கற்றுக் கொண்ட பிறகு தான் தியானத்தில் முழுமையான பேரானந்தம் என்னால் உணர முடிகிறது. ஸ்ரீவித்யா என்பது மிகப் பெரிய வித்தை. குருஜி அதை நமக்கு எவ்வளவு எளிமையான முறையில் கொடுத்திருக்கிறார். உண்மையாகவே, என்னைப் போல் இரண்டு குழந்தைகளுக்கு தாயாக இருந்து கொண்டு மன அமைதி காண்பது மிக அரிது. ஆனால் ஆல்ஃபா மற்றும் ஸ்ரீவித்யாவின் உதவியுடன் நான் எப்பொழுதும் ஆனந்த நிலையில் இருக்கிறேன். நன்றி குருஜி, நன்றி பாலா, நன்றி ஆல்ஃபா! **சங்கரி**

## ANNOUNCEMENT

**'KELAI MANAME'**
GURUJI'S PROGRAM ON POTHIGAI TV !
7.15 am Monday to Friday
You can also watch from mobile app **'DD POTHIGAI LIVE'**

---

## அறிவிப்பு

**'கேளாய் மனமே'**

பொதிகை டிவியில் குருஜியின் நிகழ்ச்சி!

காலை 7.15 மணிக்கு திங்கள் முதல் வெள்ளி வரை

மொபைல் ஆப் **'DD POTHIGAI LIVE'** மூலமும் காணலாம்.

## ALPHA MIND POWER - MOBILE APP

Download the app and register. You can make advance payment for class through mobile app **ALPHA MIND POWER**

## ஆல்ஃபா மைண்ட் பவர் - மொபைல் ஆப்

**ALPHA MIND POWER** மொபைல் ஆப் மூலமாக வகுப்பிற்கு முன் பணம் செலுத்தலாம்.

# Workshops Schedule

| CITY | WORKSHOP | DATE | DAY | TIME | VENUE |
|---|---|---|---|---|---|
| Trichy (Tamil) | **PSYCHIC ENERGY**<br>**ANUBANDHAM** | 02/02/2019<br>03/02/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Breeze Residency, Mc Donalds' Road, Trichy |
| Chennai (Tamil) | **ALPHA MEDITATION Level - 1** | 10/02/2019 | Sun | 9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar, T. Nagar, Chennai. |
| Mumbai (English) | **SRIVIDYA**<br>**PSYCHIC ENERGY** | 23/02/2019<br>24/02/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Le Grande, Off Sahar Road, J B Nagar, Andheri East, Mumbai 400069. |
| Chennai (Tamil) | **SANJEEVANI**<br>**ANUBANDHAM** | 02/03/2019<br>03/03/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar, T. Nagar, Chennai. |
| Coimbatore (Tamil) | **AMRUT SIDDHI**<br>**AISHWARYAM** | 09/03/2019<br>10/03/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Grand Regent, 708, Avinashi Rd, Coimbatore. |
| Bangalore (English) | **SRIVIDYA**<br>**SANJEEVANI** | 16/03/2019<br>17/03/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | The Fern Citadel, #41,Sheshadri Road, Anand Rao Circle, Bengaluru -560 009. |
| Chennai (Tamil) | **SPIRITUAL COUNSELING**<br>**SPIRITUAL COUNSELING** | 30/03/2019<br>31/03/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel Residency Towers, Pondy Bazaar, T.Nagar, Chennai |
| Madurai (Tamil) | **SRIVIDYA**<br>**ANUBANDHAM** | 06/04/2019<br>07/04/2019 | Sat<br>Sun | 9am to 5pm<br>9am to 5pm | Hotel GRT Regency 38, Madakulam Rd,Palanganatham, Madurai. |

*Printed & Published for*

ALPHA MIND POWER™

***Srimatha Vijayalakshmi Panthaiyan***
***ALPHA MIND POWER***
*No.4, Abusali Street, Saligramam,*
*Chennai - 600093. INDIA*
*Phone: 044-23760007*
*Mobile:9841402000, 9841696664*
*E-Mail: amp@alphamindpower.net*
*Website: www.alphamindpower.net*

***PRINTED MATERIAL***